REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55639

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 15உ வியாழன் (28—4—55) ★ ★ வெளியீடு: சித்திரை 16உ வெள்ளி (29—4—55) [இதழ் 271

18 கோடி வாக்காளர்களைக் கொண்ட நாடு

1954-ம் ஆண்டுக் கணக்குப்படி இந்தியாவில் 18,20,19,123 வாக்காளர்கள் இருக்கின்றனர். இவர்களில் 14,23 89,779 பேர் 'ஏ' பிரிவு மாநிலங்களிலும், 3,46,40,709 பேர் 'பி' பிரிவு மாநிலங்களிலும், 49,88,635 பேர் 'சி' பிரிவு மாநிலங்களிலும் இருக்கிறார்களாம்.

முதல் பொதுத் தேர்தல் நடைபெறும்போது 17,32 13,625 வாக்காளர்கள் இருந்தனர் என்றும் தெரிகிறது.

1951-ம் ஆண்டுக் கணக்குப்படி இந்தியாவின் மக்கள் தொகை 35,68,29,485 ஆகும்.

சமத்துவமின்மையில் ஜனநாயகம் தழைக்காது

'சகோதரர்களை நாம் சமத்துவமாக நடத்துவதில்லை'

'பிற நாட்டாரை சமத்துவமாக நடங்கள் என எந்த முகங்கொண்டு கேட்பது?'

புதிய தீண்டாமை மசோதா பற்றி பண்டித பந்த்

"ஒதுக்கல் கொள்கையில் தென் ஆப்பிரிக்கா 'பெரும் பெயர்' பெற்றிருக்கிறது; மனித சமத்துவச் சிறப்பை நமது நாட்டிலேயே செயலாற்றாது இருப்போமாயின், மக்கள், சமூக, இனம் ஆகிய பிரிவுகளின் ஒருமைப்பாட்டை நாம் எந்த முகங்கொண்டு வலியுறுத்துவது? நாம், நமது சொந்த சகோதரர்களை இங்கு சரிசமத்துவமாக நடத்தாத நிலையில், நம்மை வெளிநாட்டார் சமத்துவமாக நடத்தவேண்டும் என வாதிடுவது கஷ்டமாகி விடுகிறது; எனவே, நம்முடைய வாழ்க்கையைப் பராமரிப்பதற்காகவே, சமத்துவமாக நடந்து கொள்ளுவது இன்றியமையாததாகிறது."

"மக்களாட்சி வழி இயங்கும் அரசாங்க அமைப்பை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது. சமத்துவமற்றச் சுற்றுச் சார்பில் மக்களாட்சி முறை வளம் பெறாது; மக்களாட்சி முறை சமத்துவம் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டுதான் இந்தியாவின் வளத்தைப் பெருக்கியாக வேண்டும். எனவே, நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் குடியேறியுள்ள இத்தீண்டாமை எனும் புற்று நோயை ஒழிக்க, [illegible] செயலையும் மேற்கொள்ள வேண்டியவர்களாகிறோம்."

—இக்கருத்தை, இந்தியப் பேரரசின் உள்நாட்டு அமைச்சராக இருக்கும் பண்டித பந்த் அவர்கள், மக்கள் சபையில் வெளியிட்டுள்ளார்.

தீண்டாமைக் குற்ற மசோதாவின் மீது விசாரணைக் குழு செய்த சிபாரிசுகளை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென மக்கள் சபையைக் கோரினபொழுது, மசோதாவிற்கு ஆதரவாக பண்டித பந்த் மேற்குறித்துள்ளவாறு குறிப்பிட்டார்.

தீர யோசித்தே மேற்படி மசோதா உருவாக்கப்பட்டதாகவும், மசோதாவிற்கு முடிந்த உருவம் கொடுக்கப்படுவதற்கு முன்பாக பொது மக்கள் கருத்தறிய மசோதா பிரசுரிக்கப்பட்டதாகவும், சென்ற மார்ச்சு மாதத்தில் மக்கள் சபை உறுப்பினர்களின் கருத்தறிய சபையில் கொண்டு வரப்பட்டதாகவும், உள்நாட்டு அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒரு கூட்டு ஆய்வுக் குழுவிற்கு மசோதாவை விட வேண்டும் என்பது குறித்து மக்கள் சபையில் 4 நாள் விவாதிக்கப்பட்டதாகவும், மக்கள் சபையிலிருந்து 33 உறுப்பினர்கள் மேற்படி கூட்டு ஆய்வுக் குழுவில் இடம் பெற்றனர் என்றும், கூட்டுக் குழு பொது மக்களின் சாட்சியங்களைப் பெற்று திருத்தப்பட்ட பிரஸ்தாப மசோதாவை உருவாக்கி இருக்கிறது என்றும் பந்த் அறிவித்தார்.

'தண்டனை' என்ற வார்த்தையை மூல மசோதாவிலிருந்து நீக்கி விட்டு, தரப்படும் தண்டனையைக் கடுமையாக்கி இருப்பதுடன், ஒரே நபர் இரண்டாம் முறையாக அதே குற்றத்தைச் செய்வாரானல் அவருக்குக் கண்டிப்பாகச் சிறை தண்டனை தரப்பட வேண்டும் என்றும், ஷெட்யூல் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குத் தீங்கிழைத்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் ஒருவர், தாம் நிரபராதி என்பதை மெய்ப்பித்துக் கொள்ள வேண்டிய கடமையும் அவரையே சார்ந்தது என்பதை சேர்த்தும், புதிய மசோதா ஆய்வுக் குழு உருவாக்கி இருப்பதாகவும் அவர் அறிவித்தார்.

பாலாறு தண்ணீர் பிரச்சினை

மத்திய சர்க்கார் தலையிடுகிறது

புதுடில்லி, ஏப். 28—

பாலாறு தண்ணீர் பிரச்சினை பற்றி, சென்னை சர்க்காருக்கும் மைசூர் சர்க்காருக்கும் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமை குறித்து இந்திய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்குமென்பது சீக்கிரமே தெரியவரும்.

செங்கற்பட்டு, வடார்க்காடு மாவட்டங்களுக்கு பாலாற்றின் தண்ணீரைப் பயன்படுத்துவதுதான் இப்போதுள்ள முக்கியப் பிரச்சினை. இதற்கு இந்திய சர்க்கார் செய்ய இருப்பது என்ன வென்று அமைச்சர் குல்ஜாரிலால் நந்தா சீக்கிரமே அறிவிப்பாராம்.

புதிய கல்வித் திட்டம்

'வரும் ஆண்டில் அமுல் செய்ய முடியாது'

மந்திரி சுப்பிரமணியம் அறிவிப்பு

சென்னை, ஏப். 27—

"ஆரம்பக் கல்வி ஆய்வுக் குழுவின் சிபாரிசுகளை வரும் பள்ளிக்கூட ஆண்டு முதல் அமுல் செய்வது இயலாது," என்று, கல்வி மந்திரி சுப்பிரமணியம் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

"இவ்வாண்டு ஜூன் திங்களில் தான் கல்விக் குழு தனது சிபாரிசுகளடங்கிய அறிக்கையை தாக்கல் செய்யவிருக்கிறது; அந்த சிபாரிசுகள் பற்றி பரிசீலனை செய்ய சர்க்காருக்கு அவகாசம் வேண்டுமாதலால், புதியதொரு கல்விமுறையை வரும் பள்ளி ஆண்டு முதல் அமுல் செய்ய முடியாது," என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குண்டா, பராபோல் திட்டங்கள்

இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் இடம் பெறுமா?

'இறுதி முடிவு எடுக்கவில்லை' என்று மந்திரி பதில்

புதுடில்லி, ஏப். 27—

"சென்னையிலும், குடகிலுமாக இடம் பெறும் குண்டா, பராபோல் திட்டங்களின் தராதரங்கள் பற்றி இந்தியப் பேரரசு எந்தவிதத் திட்டமான முடிவிற்கும் இன்னும் வரவில்லை,"

என்று, மின்சார நீர்ப்பாசன இலாகா உதவி மந்திரியான ஜெய் சுக்லால் ஹாதி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"மூன்று எஞ்சினீயர்கள் கொண்ட குழு ஒன்று, 'இந்த இரு திட்டங்களில் எது சிக்கனமானது' என்பதை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டு, குழுவும் தனது அறிக்கையைத் தாக்கல் செய்தன்ளது. இரு மாநில அரசாங்கங்களின் கருத்துக்களும் திட்டக் குழுவிற்குக் கிடைத்துவிட்டன,"

என்றும் உதவி மந்திரி தெரிவித்திருக்கிறார்.

தோழர் என். எம். லிங்கம் என்ற உறுப்பினர்,

"இந்தப் பிரச்சினை கடந்த ஓராண்டிற்கு [illegible] தாழ்த்தப்பட்டு [illegible] என்பதும், [illegible] பிரச்சினைக்கு முடிவு [illegible] லங்களில் நடைபெற [illegible] வேலைகளின் [illegible] குறைந்துவிடும் என்பதும் சர்க்காருக்குத் தெரியுமா?" என்று கேட்டபோது, உதவி மந்திரி சொன்னார்:—

"இந்தத் திட்டங்கள் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதாக உத்தேசிக்கப்பட்டிருந்தன; சம்பந்தப்பட்ட துவக்க கால விசாரணையும், நுணுக்க விசாரணையும் முடிந்துவிட்டன; இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இவற்றைச் சேர்க்க வேண்டும் என்பது மட்டுமே இப்போதைய பிரச்சினை," என்று தெரிவித்திருக்கிறார்.

இந்தியப் பேரரசை இடித்துரைப்பர்?

காங்கிரசார் கண்கள் திறக்கின்றன

சென்னைத் திட்டங்களை வற்புறுத்த தென்னாட்டு மக்கள் சபை உறுப்பினர்கள் முடிவு

புதுடில்லி, ஏப். 27—

சென்னை மாநிலத்தில் சில முக்கியமான அபிவிருத்தித் திட்டங்களை இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்தில் சேர்க்குமாறு திட்டக் குழுவையும், தொடர்புடைய மத்திய மந்திரிகளையும் வற்புறுத்த வேண்டுமென சென்னையைச் சேர்ந்த காங்கிரஸ் மக்கள் சபை உறுப்பினர்கள் கூடி முடிவெடுத்துள்ளனர்.

தோழர் முத்துக்கிருஷ்ணன் என்பவரால் கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்தில், 5 திட்டங்களை வற்புறுத்துவதென்று முடிவாகியிருக்கிறது.

1. தொழில் நுணுக்கக் கழகத்தை சென்னையில் அமைக்க வேண்டும்;
2. பெரியாறு திட்டத்தை விரிவாக்கி பாசனவசதியைப் பெருக்க வேண்டும்.
3. சேலத்தில் உள்ள இரும்புக் கனியை தோண்டி எடுத்து உபயோகிக்கும் தொழிற்சாலை வேண்டும்.
4. அங்கு கிடைக்கும் இரும்பை முடியுமானல் ஏற்றுமதி செய்ய ஏற்பாடு வேண்டும்.
5. சென்னை மாநிலத்தில் புதிய ரயில்பாதைகள் அமைக்கவேண்டும்.

—என்ற 5 கோரிக்கைகளும் வற்புறுத்தப்படுமாம்

கவலை தரும் கோவா நெருக்கடி

மக்கள் கருத்தறிய மாநாடு

மக்கள் சபை உறுப்பினர்கள் தீவிரம்

கோவா நெருக்கடி நிலை குறித்து மக்கள் கவலைப்பட்டு வருகின்றனர்; இந்தியா, இந்த நேரத்தில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு, கவலைப்படும் மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்காக, அதிகாரப் பற்றற்ற மூன்று மாநாடுகள் கூட்டவேண்டுமென, மக்கள் சபை உறுப்பினர்களடங்கிய அதிகார பூர்வமற்ற குழு ஒன்று முடிவு செய்திருக்கிறதாகத் தெரிகிறது.

டாக்டர் ஏ கிருஷ்ணசாமி, டாக்டர் லங்கா சுந்திரம், ஏ. கே கோபாலன், அசோக் மேத்தா, திருமதி சுசேதா கிருபளானி ஆகியோர் உள்ளடங்கிய அந்தக் குழு, முதல் மாநாட்டை மே மாதத்தில், பம்பாயில் நடத்துவதெனவும், சென்னை, கல்கத்தா நகரங்களில் அடுத்த இரு மாநாடுகளையும், முறையே ஜூன், ஜூலை மாதங்களில் நடத்துவதெனவும் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

'தமிழர்கள் தாய் மொழியில் கல்வி பயில தடையேதும் இருக்காது!'

ஆந்திர முதன் மந்திரி கோபால ரெட்டி தரும் உறுதி மொழி

"ஆந்திர மாநிலத்தில் உள்ள தமிழர்கள் தங்கள் தாய் மொழியில் கல்வி பயிலுவதற்கு ஆந்திர சர்க்கார் எந்த வகையிலும் தடையாக இருக்காது; இதுபற்றி ஏதேனும் தொல்லைகள் இருந்தால் அவைகளை கவனத்திற்குக் கொண்டுவந்தால் அவற்றைப் போக்கவும் உறுதி தருகிறேன்,'

என்று, ஆந்திர முதன் மந்திரி பி. கோபால ரெட்டி கூறியிருக்கிறார்.

[திருத்தணியில் தமிழ்ப் பள்ளிகளை மூடியதும், தமிழர் நடத்தும் பள்ளிகளுக்கு மானியம்தர பிரகாசம் சர்க்கார் மறுத்ததும் நினைவிற்கொள்ளத் தக்கவை]

அனந்தப்பூர் எஞ்சினீயரிங் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் எல்லோரும் கிண்டி எஞ்சினீயரிங் கல்லூரிக்குத் தங்களை மாற்ற வேண்டும் என்று கோரியுள்ளதால் ஏற்பட்டுள்ள பிரச்சினை சம்பந்தமாக, சென்னை கல்வி மந்திரியுடன் தாம் கடிதப் போக்குவரத்து வைத்திருப்பதாயும் அவர் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு நெசவு ஆலை

திருநெல்வேலியில் இடம் பெறும்

புதுடில்லி, ஏப். 27—

நெசவு ஆலை ஒன்று கூட்டுறவு அடிப்படையில் திருநெல்வேலியில் துவக்கப்படும் என்று வர்த்தக தொழில் இலாகா உதவி மந்திரி நித்தியானந்த கனுங்கோ மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே அத்தகைய ஒரு ஆலை குண்டக்கல்லில் துவக்கப்பட்டிருக்கிறது.

அந்த ஆலையின் விதிமுறைகளின்படி, கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் மட்டுமே, பங்குதாரர்களாக முடியுமே தவிர, தனிப்பட்ட நெசவாளர்கள் பங்குதாரர்களாக முடியாது என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 28—4—'55 வியாழன்

"அன்புத் தொல்லை!"

ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழ் அடிமையாகக் கிடக்கும் குடியேற்ற நாடுகளில், இயந்திரத்துறைத்தொழில்பெருக்கம் இருக்காது-ஏற்கனவே இருந்த குடிசைத் தொழில்களும் சிறுகச் சிறுக செத்து மடியும் என்பது பொது உண்மை.

இப்பொது உண்மையில், ஒரு குடியேற்ற நாட்டுக்கும் மற்றொரு குடியேற்ற நாட்டிற்கும் தர மாற்றம் இருக்குமே அல்லாது, அடிப்படையில் கணிசமான மாற்றம் இருக்காது.

அதுபோன்றே, குறிப்பிட்ட ஒரு ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்கியுள்ள குடியேற்ற நாட்டின் தொழில் பெருக்கத்தை என்றென்றைக்கும் நிரந்தரமாகத் தடுத்துவருவது என்பதும், அக்குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்தால் முடிவதில்லை—முடியவும் முடியாது. ஏகாதிபத்திய வளர்ச்சியின் இறுதிக் கட்டத்தில், தனது ஆதிக்கத்தில் உள்ள குடியேற்ற நாட்டை, தான் விரும்பியோ விரும்பாமலோ, மெள்ள மெள்ளத் தொழில்மயமாக மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயம் ஏகாதிபத்தியத்திற்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இப்பேருண்மையை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்கிக் கிடந்த இந்தியத் துணைக் கண்டத்தில், ஏகாதிபத்தியம் வெளியேறிய நேரத்தில் உருப் பெற்றிருந்த தொழில் வளம், எவரும் ஒப்பும் வகையில் உறுதி செய்திருக்கிறது.

ஏகாதிபத்திய வளர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் உள்ளடக்கமாக இருக்கும் இம்மகத்தான உண்மையை, ஏற்கனவே குறிப்பிட்ட சில நிபுணர்களின் ஏடுகளில் இடம் பெற்றிருக்கவில்லை என்பதற்காக, விஞ்ஞான அரசியல் விழியின் பதிப்புரிமை கொண்டாடுவோர் ஒப்ப மறுத்தனர். ஆனால் அவர்கள் உடன்பாட்டையும் எதிர்ப்பையும் கருதாமல், முன்கூட்டியே ஆராய்ந்து அறிந்த சிலர், ஏகாதிபத்தியத்தின் உள்ளடக்கத்தை விளக்கியிருந்தனர்.

துவக்கத்தில் அதை ஒப்ப மறுத்தோர், இந்தியத் துணைக் கண்டத்தை விட்டு ஏகாதிபத்தியம் தன்னிச்சையாக வெளியேற உடன்பட்டதும், தங்கள் பிடிவாதப் போக்கை மீண்டும் நுணுகி ஆராயத் துவங்கினர், அவ்விஞ்ஞான அரசியல் விழி பதிப்புரிமையாளர்கள். சில அறிஞர்களால் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டதும், துவக்கத்தில் தங்களால் நையாண்டி செய்யப்பட்டதுமான அவ்வுண்மையை, முடிவில் வேறு வழியில்லாமல் அவர்கள் ஒப்புக்கொண்டனர். ஒப்புக்கொண்டதுடன் அக்கருத்தை மேலும் உறுதிப்படுத்த, தக்க எடுத்துக்காட்டுகளையும் திரட்டித்தந்து, உண்மையை நிலைநாட்டவும் செய்தனர். நிற்க,

ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்கிக்கிடந்த இந்தியத் துணைக் கண்டத்தில் உருவாக்கப்பட்ட தொழில்கள் பரவலாக உருவாக்கப்படவில்லை. ஆலை சர்க்கரைத் தொழில் உத்திர பிரதேசத்திலும், சணல் ஆலை நெசவும், உருக்கு இரும்புத் தொழிலும் வங்காளப் பகுதியிலும், பருத்தி நெசவுத் தொழில் பம்பாய் வட்டாரத்திலும் நிறுவப்பட்டுவிட்டன. ஒன்றிரண்டு தொழில்கள் திராவிடப் பகுதியிலும் இடம் பெற்ற போதிலும், மக்களின் பெருந்தொகைக்கேற்ப கணிசமாகத் தொழில் வளர்ச்சிக்கு வகைசெய்யப்படவில்லை.

இப்பெரும் வேற்றுமைக்கான காரணம் தேட வேண்டிய கட்டாயம் இப்பொழுதில்லை. காரணம் கண்டறியும் முயற்சியும் அவசியமற்றதாகும். காரணம் விளக்கப்படாததால், தொழில் துறையில் தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் இருந்துவரும் பேதாபேதம் மறைந்துவிடப் போவது கிடையாது.

வட நாட்டில் அமோகமான தொழில்கள் நிர்மாணிக்கப்பட்ட அதே காலத்தில், திராவிடத்திலும் சரிசமமாகத் தொழில்கள் உருவாக்கப்பட்டிருந்தால், மூலத் தொழிலாக விவசாயத்தையே நம்பிக்கிடக்க வேண்டிய கட்டாயம் இங்குள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு ஏற்படுவதற்கு நியாயமே இருந்திருக்காது. கடுகளவு இனிப்பை நூற்றுக் கணக்கில் மொய்த்து ஏமாற்றம் பெறும் ஈக்கள்போல, அனைவருக்கும் வாழ்வு தர முடியாத குறைந்த அளவு நஞ்செய் புஞ்செய்களை நம்பி, வறுமையும் வாட்டமும் பெற்றுத் தீரவேண்டிய அவல நிலை இலட்சக் கணக்கான திராவிடர்களுக்கு ஏற்பட்டிருக்க இடமில்லை.

குறைந்த அளவு நிலத்தை நம்பி, ஏழ்மையையும், இல்லாமையையும் சொத்தாகப் பெற்றிருந்த மக்களைக் கொண்ட திராவிடம், தனது வறுமையின் விளைவாகவே, நவீன தொழில் ஏற்பாட்டிற்குத் தகுதியற்றதாகவும் ஆகிவிட்டது. ஏகாதிபத்திய ஆட்சி காலத்தில்தான், திராவிடத்தின் நிலை இதுவென்பதில்லை. வெள்ளையர் வெளியேறி, வடநாட்டு ஏகாதிபத்தியம் அரசோச்சும் நிலை பிறந்தும்கூட, திராவிடத்தில் இருள்தான் சூழ்ந்துகொண்டு இருக்கிறது.

குறைந்த அளவு வயல்களை நம்பிக்கிடந்த திராவிடப்பெருங்கூட்டம், தங்கள் மரபுப்படி கடல்தாண்டிச் சென்றனர். ஏகாதிபத்தியம் அதற்குப் பேருக்கமும் அளித்தது, வெளிநாடுகளில் உள்ள தம் நாட்டவர் நலம் கருதி!

இந்தியத் துணைக் கண்டத்தை விட்டு தான் வெளியேறின பொழுது, தன்னுல் நாடு கடத்திச் சென்று, தம் ஆதிக்கத்தின் கீழிருந்த குடியேற்ற நாடுகளில் குடியிருக்கச் செய்த திராவிடர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் வகையில், தொடர்புடைய நாடுகளிடம், தக்க ஏற்பாடு செய்திருக்க வேண்டும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். அது, அதனுடைய பொறுப்பும் கடமையுமாகும். ஆனுல், ஏகாதிபத்தியம், அதைச் செய்யத் தவறிவிட்டது. அதன் விளைவு, கடல் கடந்த தமிழர்களின் கண்களைப் பாழடைந்தக் கிணறுகளாக மாற்றுவதில் முடிந்திருக்கிறது.

ஆசை வார்த்தை கூறி அழைத்துச் சென்ற ஏகாதிபத்தியமோ மறைந்துவிட்டது. ஆனுல், அங்குள்ள ஆட்சியாளர்களால் அடிபடவும், உதைபடவும், அவமானப்படவுமான இழிநிலையில் நம் தமிழர்கள் — திராவிடர்கள் ஆங்காங்கே இருந்து வருகின்றனர்.

தங்களை கடத்திச் சென்ற காலை ஏகாதிபத்தியம் கூறிய ஆசை மொழியில், இன்று தாங்கள் அனுபவிக்கும் இழிவும் இடுக்கணும் மறைந்திருக்கிறது எனும் உண்மையை அன்று சென்ற தமிழர்கள்—திராவிடர்கள் அறியார்; அந்நிலையில் அறியவும் இயலாது!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் காட்டிய வழியைப் பின்பற்றி, வடவர் ஏகாதிபத்தியம், தன் பிடியில் சிக்கியுள்ள போபால் பூமியை நெல் களஞ்சியமாக மாற்றி அமைக்க, அப்பகுதிக்கு, திராவிடத்தில் இருக்கும் திரு-கொச்சியிலிருந்து திராவிட இனத்தினரை இறக்குமதி செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கிறது.

பத்து ஏக்கர் பரப்புள்ள கரம்பை, இறக்குமதி செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு திராவிட குடும்பத்திற்கும் ஒதுக்கி இருக்கிறதாம், அல்லது கொடுத்திருக்கிறதாம் வடவர் ஏகாதிபத்தியம்!

அதைப் பண்படுத்திச் சிறுமணியும் சிரகச் சம்பாவும் மணி மணியாகக் கதிர்விட்டுக் குலுங்கும் பண்புள்ள நிலமாக ஆக்க, தேவைப்படும் உழவுப் படைகளை, கடனுக்கு உதவுகிறதாம் இந்தியப் பேரரசு!

கொடுத்துள்ள நிலத்தில் கள்ளி முள்ளி காட்சி தருகின்றன இப்பொழுது!

மேடு பள்ளம் நிரம்பிய கட்டாந்தரை தரப்பட்டிருக்கிறது இன்று!

நாளை அல்லது மறுநாள், தங்கள் உழைப்பாலும் கண்காணிப்பாலும் பொன் விளையும் போக பூமியாக அதனை மாற்றிடுவர், நம் திராவிடர். அனுபவம் அதனை உறுதி செய்கிறது.

நமமவர் உழைப்பால், மலை, தேயிலைக் காடாகி இருக்கிறது—காப்பித் தோட்டமாக மாறி இருக்கிறது!

நமது திராவிட ஆற்றலின் விளைவு அது என, நாம் தேனீர் அருந்தும்பொழுதும், காப்பி பருகும்பொழுதும் எண்ணுகிறோம் - இறும்பூதெய்துகிறோம்! ஆனுல்—ஆனுல்—!

அண்டை நாடுகளின் ஆளவந்தார்களால், அந்த ஆற்றல் அரசர்கள் அவமானம் அடைகின்றனர்; விம்மி விம்மி அழுகின்றனர்; தாய் நாடு திரும்ப முடியாமல் பரிதவிக்கின்றனர் எனக் கேட்கும்பொழுது, நம்மிடத்தில் இயல்பாக இருக்கும் இரக்கம் ஓடி ஒளிகிறது—நாம் நம்மையும் அறியாமலேயே சேரன் செங்குட்டுவன் இல்லையே என ஆத்திரமும் ஏக்கமும் ஒருங்கே கொள்ளுகிறோம்!

போபால் போன திராவிடர்கள், தமது ஆற்றலை நிலைநாட்டியே தீருவர் என்பதில் ஐயமில்லை. அதன் பின்னர், அவர்களுக்கு ஏற்பட இருக்கும் நிலையை நினைக்கும்பொழுதே நமது நெஞ்சு திடுக்கிடுகிறது!

ஆனுல் காங்கிரஸ் திராவிடர்களோ வட நாட்டு ஏகாதிபத்தியத்தின் இந்த இறக்குமதிப் பணியை, இந்தியப் பேரரசின் அன்புக் காணிக்கையாகக் கருதுவர்—கூறிடவும் செய்வர். அங்கும் வரலாறு உணர்ந்தவர் உண்டு. அவர்கள் எண்ணிக்கையில் சிலர்—அறிவோம்.

அவர்கள் கருதுவர்—ஆனுல் வெளியில் கூறுர் உண்மையை. 'அன்புத் தொல்லை' என்பர் இந்தியப் பேரரசின் இச்சிறுமைப் போக்கை. காலம் மாறும்—இந்தியப் பேரரசின் இந்த ஏற்றுமதி இறக்குமதிக் காரியத்தை, அவர்கள் கனல் கக்கக் கண்டிக்கும் காலம் அதி விரைவில் வரத்தான் போகிறது!

பவானிசாகர் விவசாய ஆராய்ச்சி நிலையம்

இதர நிலையங்களைவிட பெரியதாயிருக்கும்

கோவை மாவட்டத்தில் உள்ள பவானி சாகரில் 430 ஏகராவில் ஒரு விவசாய ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தப்படுமெனத் தெரிகிறது.

இதற்கு சுமார் ரூ. 2½ லட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறதாம்.

பருத்தி, நிலக்கடலை, புஞ்சை தானியங்கள் பற்றியும், கீழ்பவானி ஆயக்கட்டுக்கு சம்மந்தப்பட்டமற்ற பிரச்னைகள் பற்றியும் ஆராய்ச்சி நடத்தப்படும்.

மாநிலத்திலிருக்கும் இதர ஆராய்ச்சி நிலையங்களைவிட இது பெரியதாக இருக்கும்.

சத்தியமங்கலத்தில் இப்போது உள்ள ஆராய்ச்சி நிலையமும் தொடர்ந்து விவசாய விளக்கப் பண்ணையாக வேலை செய்து வருமென அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

தற்சமயம் சென்னை மாநிலத்தில் மொத்தம் 45 விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் இருக்கின்றன.

கலைச் செல்வங்கள்

வெளிநாடுகளில் உள்ள இந்திய கலைச் செல்வங்களின் (!) சித்திரங்கள் முதலியவற்றின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க ஏற்பாடாகியுள்ளதாம்.

"பட்டியல் தயாரான பின் இச் செல்வங்களை இந்தியாவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகும்," என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அரிசியும்—கோணிப்பையும்

"தாய்லந்திடமிருந்து அரிசி பெற்றுக்கொண்டு, அதற்குப் பதிலாக இந்தியா, தாய்லந்திற்கு கோணிப் பைகள் கொடுக்கும்," என்று இந்திய சர்க்கார் வர்த்தக மந்திரி கார்மார்க்கர் குறிப்பிட்டிருக்கிறர்.

அதிகாரிகளின் உயர்ந்தபட்சசம்பளம்

'ஆயிரம் ரூபாய்க்கு மேல் கூடாது'

மைசூர் மாநில சட்டசபையின் தீர்மானம்

"சர்க்கார் பதவி வகிக்கும் அதிகாரிகளுக்கு ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ்., 'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' உறுப்பினர்கள் நீதி இலாகாவினர் உட்பட எவருக்கும் மாதம் ரூ 1000-த்திற்கு மேல் சம்பளம் தரக்கூடாது," என்ற தனி தீர்மானம் ஒன்று மைசூர் சட்டசபையில் ஒருமனதாக நிறைவேறியுள்ளது.

சாகுபடிக்கு ஜப்பானிய முறை

இலட்சிய அளவை சென்னை மிஞ்சிவிட்டது

சென்னை, ஏப். 26—

சாகுபடி செய்வதில் ஜப்பானிய முறையை இங்குள்ள நிலைகளுக்கொப்ப மாற்றியமைத்துக்கொண்டு செயலாற்றுவதில், சென்னை முன்னணியில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஒரு லட்சம் ஏகர் பயிரிடுவது என்ற லட்சிய அளவைக் காட்டிலும் 3¼ லட்சம் ஏகர் அதிகமாக ஜப்பானிய முறையில் சாகுபடி செய்யப்பட்டிருப்பதாக விவசாய இலாகா டைரக்டர் எம். எஸ். சிவராமன் கூறியுள்ளார்.

அடுத்த பருவ காலத்தில் சுமார் 10 லட்சம் ஏக்கர் இம்முறையில் விவசாயம் செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

நெல் பயிரிடுவதற்கு மட்டுமின்றி இதர முக்கியமான தானியங்கள் பயிரிடுவதற்கும் இம்முறையைப் பயன்படுத்துவதில் சென்னை முன்னணியில் இருக்கிறது என்றும் அவர் தெரிவித்திருக்கிறர்.

விவசாய முறையில் சென்னை மேற்கொண்டுள்ள அபிவிருத்தி செய்யப்பட்ட முறையினை, மத்திய அரசாங்க, விவசாய ஆராய்ச்சிக் கழகம், உள்நாட்டு நிலங்களுக்கொப்ப மாற்றியமைத்துக் கொள்ளப்பட்ட ஜப்பானிய முறைக்குச் சமமானதென ஒப்புக்கொண்டுள்ளது என்ற தகவலையும் அவர் வெளியிட்டிருக்கிறர்.

பல்லாயிரம் பாங்கி ஊழியர் ஆர்ப்பாட்டம்

பம்பாய், ஏப். 26—

ஆயிரக்கணக்கான பாங்கி ஊழியர், பல பாங்கிகள் முன்கூடி இன்று ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

'வருடாந்திரச் சம்பள உயர்வு நாள்' கொண்டாடுமாறு, அகில இந்திய பாங்கி ஊழியர் சங்கம் விடுத்திருந்த அறிக்கைக்கிணங்கவே ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது.

தங்களுக்கு வருடாந்திரச் சம்பள உயர்வு தரப்படுவதில் பாங்கி நிர்வாகிகள் கொண்டுள்ள முரண்பாடுபட நடந்து கொள்வதினுலேயே தாங்கள் ஆர்ப்பாட்டம் செய்வதாக, பாங்கி ஊழியர்கள் கூறியிருக்கின்றனர்

கோட்டைப் பகுதியில் தடை உத்தரவு இருப்பதால், அப்பகுதியிலிருக்கும் பாங்கி ஊழியர் ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடியபோது அவர்களைப் போலீசார் கலைத்தனர் என்றும் தெரிய வருகிறது.

சென்னையில்

சென்னை மாநில பாங்கி ஊழியர் சம்மேளனத்தைச் சார்ந்த 700-பேர்கள் நேற்று 'ஆட்சேப தினம்' கொண்டாடினர்.

பாங்கிகள் ஏப்ரல் மாதத்தில் தரவேண்டிய சம்பள உயர்வைத் தராமல், 'தற்காலிகப் படி'யில் சரிக்கட்டி விட முயற்சிப்பதற்கே இந்த எதிர்ப்பு என்று அவர்கள் கூறியிருக்கின்றனர்.

பத்ராவதி சிமெண்ட் தொழிற்சாலை

விரிவாக்க மைசூர் சர்க்கார் திட்டம்

பத்ராவதி சிமெண்ட் தொழிற்சாலையிலேயே மேலும் ஒரு சிமெண்ட் உற்பத்திசாலையை ரூ 16 கோடி செலவில் நிறுவ மைசூர் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

இதில் தினம் 300 டன் சிமெண்ட் உற்பத்தியாகுமெனத் தெரிகிறது.

ஏற்கனவேயுள்ள தொழிற்சாலையில் தினம் 60 டன் உற்பத்தி அளவு 260 டன்னாக அண்மையில் தான் உயர்த்தப்பட்டதாம்.

'மதத்தைப் பாதுகாக்கும் நினைப்பில் பெண்களுக்குத் தீங்கு செய்யாதீர்!'

'விவாகரத்தை 'நாரத ஸ்மிருதி' அனுமதிக்கிறது'

இந்து திருமண மசோதா விவாதத்தில் சனாதனிகளுக்கு அமைச்சர் அறிவுரை

புதுடில்லி, ஏப். 26—

"கணவன் இறந்துபோனாலோ, அல்லது ஆண்மையிழந்தவனாக ஆகிவிட்டாலோ மனைவி வேறு கணவனுடன் தனது வாழ்க்கையை நடத்த முற்கால இந்து சட்டம் அனுமதித்தது; 'நாரத ஸ்மிருதி' இதுபற்றி எடுத்துச் சொல்கிறது; ஆகவே, இந்து சட்ட மசோதா இந்து மதத்திற்கு விரோதியானதல்ல,"

என்று, இந்திய சர்க்கார் சட்ட இலாகா அமைச்சர் படாஸ்கர், மக்கள் சபையில் மேற்படி மசோதாவை பிரரேபித்துப் பேச்சையில் கூறினார்.

இந்து திருமண மசோதாவை இன்று மக்கள் சபையில் அமைச்சர் படாஸ்கர் ஆலோசனைக்குவைத்தார். இந்த மசோதா மேல்சபையில் நிறைவேறியிருக்கிறது.

திருமண வயதை 18, 15 என்றும், கோர்ட்டு மூலமாக கணவன்—மனைவி பிரிக்கப்படுவதற்கும், விவாகரத்து மூலமாக இருவர் பிரிக்கப்படுவதற்கும் மாறுபாடு என்னவென்பதையும் மேல்சபை விளக்கமாக சுட்டிக்காட்டியிருக்கிறது.

'இந்த மசோதாவில் மூன்று பிரச்சினைகள் உள்ளன,' என்று அமைச்சர் கூறினார்.

"திருமணம் ஒரே ஜாதியில்தான் நடைபெற வேண்டுமென்பதை ஒழிப்பது, ஒருவனுக்கு ஒரே மனைவிதான் என்பதை நிர்ணயிப்பது, திருமணத்தை ரத்து செய்து கொள்ள அனுமதிப்பது ஆகிய மூன்று பிரச்சினைகளில், முதல் பிரச்சினை 1949-ல் நிறைவேற்றப்பட்ட இந்த திருமண மசோதாவின் மூலம் தீர்க்கப்பட்டது; இரண்டாவது பிரச்சினையை எல்லோரும் ஒப்புக்கொண்டு விட்டனர்—சமுதாய மாறுதல் அதற்கு இடமளித்துவிட்டது; மூன்றாவது பிரச்சினையைத் தீர்க்கவே இந்த மசோதா," என்று அமைச்சர் எடுத்துக்காட்டினார்.

'இந்த மசோதா இந்து மதத்தின் மீது நடத்தப்படும் தாக்குதல்,' என்று பலர் கூறுவதை எடுத்துக்காட்டி, 'அக்கருத்து தவறானது' என்று அமைச்சர் கூறினார்.

2,000 ஆண்டுகட்கு முன்னர், மனுவின் கால முதல் இந்து சட்டங்களில் ஏராளமான மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன வென்றும், இன்றைய இந்து சட்டத்திற்கும், அன்றைய இந்து சட்டத்திற்கும் ஏராளமான மாறுதல் காணப்படுகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

"மனுவின் காலத்திலோ, அல்லது யாக்ஞிய வல்கியரின் காலத்திலோ காணப்பட்ட இந்து சட்டம் இன்று காணப்படவில்லை; இப்போதைய இந்து சட்டம் தர்க்க ரீதியாகவோ அல்லது தற்கால சமுதாய அமைப்புக்கு ஏற்றது என ஒப்புக்கொள்ளும்படியாகவோ இல்லை.

"இன்றைய ஜாதி முறை, சிதைக்கப்பட்டு சீரழிந்துபோன பழைய வருணாச்சிரம அமைப்பாகும். 'விவாகரத்தை அனுமதிப்பதால் திருமணத்தின் புனிதத் தன்மை கெட்டுவிடும்,' என்று சொல்வோர் உள்ளனர்; பழைய இந்து சட்டம், 'திருமணம் என்பது பிரிக்கப்பட முடியாத ஒன்று,' எனவோ, 'பிரிக்கக் கூடாத ஒன்று,' எனவோ கருதி, அதை அவ்வளவு புனிதமானதாகக் கருதவில்லை.

"வேண்டுமென்றால், 'விவாகரத்திற்கு, மனு, விதி முறைகளை வகுக்கவில்லை,' எனலாம்; அக்காலத்தில் மனைவிமார்களை விற்கவோ, அனாதைகளாக தெருவில் துரத்திவிடவோ கணவன்மார்களுக்கு உரிமை இருந்தது. அப்போது எப்படி அவர்கள் விவாகரத்திற்கு விதி முறைகளை வைத்திருக்க முடியும்? ஒரு பெண்ணை ஒரே ஒரு முறைதான் அப்பெண்ணின் பெற்றோர்களால் திருமணம் செய்து கொடுக்க முடியும் என்பது மனு ஸ்மிருதியின்படி உண்மைதான். அதனாலேயே, கணவன்—மனைவியர் எப்போதும் சேர்ந்து வாழவேண்டுமென்பது கிடையாது. 'பிற்காலத்தில் தங்கள் கணவன் இறந்துபோனாலோ, அல்லது ஆண்மைத்தனத்தை இழந்துவிட்டாலோ, பெண்கள், வேறு கணவனைத் தேடிக்கொள்ளலாம்,' என்று 'நாரத ஸ்மிருதி' அனுமதித்திருக்கிறது.

இப்போதும் இந்து சமுதாயத்தில், விவாகரத்து, 80 சதவிகிதம் மக்களிடையே அமுலில் இருக்கிறது இந்த முறை நின்றுபோய்விட்டது என்பது சரியல்ல விவாகரத்து அனுமதிக்கப்படுவதால் மட்டும் எல்லோரும் மனைவியரை விட்டுவிட்டு, வேறு பெண்களை நோக்கி ஓடிவிடுவர் என்பதும் தவறு!

"இந்த மசோதா சமுதாய முக்கியத்துவம் வாய்ந்தது 'பழைய காலத்தைப் பாதுகாக்கிறேன்,' என்று கூறிக்கொண்டு, சமூக விரோதமான காரியத்தைச் செய்வதோ, நாட்டின் பாதி எண்ணிக்கையான பெண்களுக்குதீங்கிழைப்பதோ கூடாது. பலருக்கு விவாகரத்து பிடிக்கவில்லை என்பது எனக்குத் தெரியும்; அதே நேரத்தில், அவர்கள் தங்கள் விருப்பம் போல் நடப்பதைத் தடை செய்யும் விதத்தில் நான் எதும் செய்யவில்லை என்பதையும் உணர்வேன். இந்தச் சட்டம் நிறைவேறிய பின்னரும், விவாகரத்து என்பது கட்டாயமானதல்ல; தம்பதிகளுக்கு இந்த மசோதா எவ்விதத் தீங்கும் செய்யாது.

"இந்த மசோதாவை, கட்சியின் திட்டமாகக் கொண்டுவரவில்லை. சமுதாயத்தின் நலனை மனதில் கொண்டுதான், சரியெனப் பட்டதை நாங்கள் செய்கிறோம்"

மத்தியப்பிரதேச இரும்பு ஆலை

வேலைகள் விரைவில் நடைபெறுகின்றன

நாகபுரி, ஏப். 27—

கிழக்கு மத்தியப் பிரதேசத்தில் ரஷ்ய உதவியுடன் கட்டப்படும் இரும்பு—எஃகு ஆலைகள் பற்றிய ஏற்பாடுகள் விரைவில் நடைபெறுகின்றனவாம்.

தொழிற்சாலைக்கான நிலத்தை சர்க்கார் எடுத்துக்கொள்வதில் 5,000 நிலச்சுவான்தாரர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும், 59,000 ஏகர் நிலம் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிகிறது.

இப்பகுதி நிலங்கள் மிகவும் செழிப்பு வாய்ந்ததாகையால் அப்பகுதியில் உள்ள கிராம மக்கள் தொழிற்சாலையை இன்னும் 50 மைல் தூரம் தள்ளி அமைக்குமாறு சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அதிக நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றும், இந்த நிலங்கள் தொழிற்சாலைக்கு தேவையல்லவென்றும், மற்றும் இதுபோன்ற 200 ஆட்சேபக் குறிப்புகள் சர்க்காருக்கு வந்துள்ளனவாம்.

'தேர்தலில் போட்டியிடுபவர் வாக்காளராக இருக்க வேண்டிய அவசியமில்லை'

இந்திய சர்க்காருக்கு தேர்தல் குழுவின் சிபாரிசுகள்

"அடுத்து வரும் பொதுத் தேர்தல்களில் போட்டியிடும் கட்சிகளுக்கு, நாட்டில் உள்ள வானொலி நிலையங்கள் மூலமாகப் பிரச்சாரம் செய்ய வாய்ப்புகள் அளிக்கலாம்," என்று தேர்தல் குழு இந்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்திருக்கிறது.

இந்தியாவில் நடைபெறும் தேர்தல் முறைகள் சிலவற்றை மாற்றியமைக்கவும், சுலபமாக தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளையும் இந்தியாவின் தேர்தல் குழு தனது அறிக்கையில் சிபாரிசு செய்திருக்கிறது. இந்த அறிக்கை மக்கள் சபையில் வைக்கப்பட்டது "நாடு முழுமையும், ஒரே நேரத்தில் பொதுத் தேர்தல்கள் நடைபெற வேண்டும்; தேர்தல் நடைபெறும் காலம் அறிவிப்பு நாள் துவங்கி இறுதிநாள் வரை 63 நாட்களுக்குள் இருக்க வேண்டும்," என்று கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை தேர்தல் தலைமை அதிகாரி சுகுமார் சென் தயாரித்துள்ளார்.

திருவாங்கூர்—கொச்சி, ஆந்திரா ஆகிய மாநிலங்களைத் தவிர மற்ற மாநிலங்களில் எல்லாம் பாராளுமன்றத்திற்கும், சட்டசபைகளுக்கும் தேர்தல் ஒரே நேரத்தில் நடைபெறலாம் என்று கூறப்பட்டுள்ளது.

தேர்தல் குழு செய்துள்ள சிபாரிசுகளில் முக்கியமானவை பின்வருமாறு:—

"ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெற ஒரு சில மாநில சட்டசபைகளை முன்கூட்டியே கலைக்குமாறு நேரிடலாம்; அப்படிச் செய்வது பலன் அளிக்கக் கூடியதே.

"அடுத்து நடைபெறும் பொதுத் தேர்தல் ஜனவரி அல்லது பிப்ரவரி திங்களில் நடைபெறுவது நல்லது;

"பாராளுமன்ற மேல் சபைக்கோ, மாநில சட்ட சபையின் மேல்சபைக்கோ போட்டியிட்டு தோற்போரின் ஜாமீன் தொகையைப் பறிமுதல் செய்வது தேவையில்லை;

"இப்போது அனுமதிக்கப்படும் தேர்தல் செலவுத் தொகை மிகவும் குறைவு; இதை அதிகரிக்க வேண்டும். தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களே தேர்தல் செலவு கணக்குகளைக் காண்பிக்க கோரப்பட வேண்டும்; தேர்தல் கணக்குகளைக் காண்பிக்காமற்போனால் அதைக் கிரிமினல் குற்றமாக்க வேண்டும்.

தேர்தலில் போட்டியிடும் நபர் வாக்காளராக இருக்க வேண்டுமென்பது அவசியம் இல்லை; வாக்காளராகத் தகுதி பெற்றிருந்தால் போதும்; நியமனப் பத்திரத்தாளில் பிரரேபனை செய்வோரும், அதை வழி மொழிவோரும், அந்தத் தொகுதியில் வாக்காளர்களாக இருப்பது அவசியமில்லை.

"ஒவ்வொரு 'நோட்டுச் சாவடி'யிலும் ஒரே 'வாக்குப் பதிவு கொட்டடி' இருப்பதுதான் நல்லது; ஒரே நிலையத்தில் வாக்கு அளிக்கும் இடங்கள் பல இருப்பதால் குழப்பம் ஏற்படுகிறது," என்பதும் தேர்தல் குழுவின் கருத்தாகும்.

"பொதுத் தேர்தலில் தனது மதிப்பை உபயோகப்படுத்துவதை தடுக்கும் சட்டம், தேர்தலில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு மட்டுமின்றி எல்லா சர்க்கார் அதிகாரிகளுக்கும் பொருந்துமாறு செய்யப்படவேண்டும்.

"தேர்தல்பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளாத சர்க்கார் அதிகாரியாக இருந்தாலும், அவர் தேர்தலில் தனது செல்வாக்கைப்பயன்படுத்தினால் அது குற்றமாக்கப்படவேண்டும்.

"தேர்தல் வழக்குகளை விசாரிக்க ஒரு நீதிபதி கொண்ட நீதிமன்றமே போதும்; அந்த நீதிமன்றத் தீர்ப்பின் மீது அப்பீல் செய்ய வழிவகை செய்யப்பட வேண்டும்."

ஆந்திரர்-ஒரியர் கலவர எதிரொலி

வழக்கை வேறு நீதிமன்றத்துக்கு மாற்ற கோரிக்கை

சுப்ரீம் நீதி மன்றத்தின் ஆலோசனை ஒப்புக்கொள்ளப்பட்டது

புதுடில்லி, ஏப். 26—

பர்லாகிமிடியில் ஆந்திரர்—ஒரியர்களிடை நடைபெற்ற கலவரத்தின் விளைவாக கி. பு. கோ. 527-வது பிரிவின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த என். சிராமுலு உள்ளிட்ட 19 நபர்கள், தங்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கை, பர்லாகிமிடி பொது மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரிக்கக் கூடாது என்றும், ஆந்திர எல்லையை அடுத்துள்ள ஏதாவது ஒரு நீதிமன்றத்திலாவது அல்லது ஒரிசா மாநிலத்திற்கு வெளியில் எந்த மாஜிஸ்திரேட் கோர்ட்டிலாவது விசாரிக்கக் கட்டளையிட வேண்டுமென்றும், கொடுத்திருந்த மனுவின்மீது, இன்றுகூடிய சுப்ரீம் நீதிமன்றத்தின் முழு உறுப்பு, முடிவு கூறியது.

குறிப்பிடப்பட்ட வழக்கு, ஒரிசா உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட மாவட்ட நீதிபதியின் முன்னர் விசாரிக்க ஏற்பாடு செய்ய, ஒரிசா அரசாங்கத்தின் சார்பில் நீதித்துறை அதிகாரி உறுதியளிக்க வேண்டுமென, சுப்ரீம நீதிமன்றம் ஆலோசனை கூறியது. அதை மனுதாரர்கள் ஒப்புக்கொண்டு, மனுவை வலியுறுத்தாது விடுத்தனர்.

துவக்கத்தில், ஒரிசா மாநிலத்தில் உள்ள குறிப்பிட்ட ஒரு நீதிபதிதான், தங்கள் வழக்கை விசாரிக்க வேண்டுமென மனுதாரர்கள் எழுத்து மூலம் கோரினர். அதை ஒரிசா நீதித்துறை அதிகாரி பலமாக எதிர்த்தார்.

மேற்படி வழக்கு ஆந்திரா-ஒரிசா எல்லையில் உள்ள பர்லாகிமிடியில், அப்பகுதியை ஆந்திரத்தோடு இணைக்க வேண்டும் என்று செய்யப்பட்ட கிளர்ச்சியின் விளைவாகும். ஆந்திரர்களும் - ஒரியர்களும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். இக்கலவரம் சென்ற ஆண்டு அக்டோபர் 28-ந் தேதியில் துவங்கி தொடர்ந்து சிலநாள் நடைபெற்றது.

அமெரிக்காவின் 'பிடி' தளர்கிறது!

சூ-என்-லாய் கருத்துக்கு வாஷிங்டன் செவிசாய்ப்பு

"பார்மோசா பிரச்சினை தீருவதற்கு சீனப் பிரதமர் சூ-என்-லாய் கூறியுள்ள யோசனையை அமெரிக்கா, நன்றாக ஆராய இருக்கிறது," என்று அமெரிக்க அமைச்சர் டல்லஸ் கூறியுள்ளார்

"துப்பாக்கி முனையின் மீதன்றி நட்புமுறையில் சந்தித்துப் பேசுவது நல்லது," என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

பாண்டுங் மாநாட்டின்போது சூ-என்-லாய், 'பார்மோசா பற்றி சீனாவும்—அமெரிக்காவும் கூடிப் பேசுவது நலம் பயக்கும்,' என்று குறிப்பிட்டது பற்றி டல்லஸ், நிருபர்களிடையே நீண்ட நேரம் பேசினார்.

"பார்மோசாவில் போர் நிறுத்தம் ஏற்படுவதன் பொருட்டு நடைபெறும் பேச்சு வார்த்தைகளில் தேசீயச் சீனப் பிரதிநிதிகள் கலந்துகொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்தப் போவதில்லை," என்று டல்லஸ் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

"தேசீய சீனா பேச்சுவார்த்தைகளில் இடம் பெற வேண்டுமென்பது தூரக்கிழக்கின் அமைதியையொட்டி அவசியம் என்றாலும், போர் நிறுத்தம் என்பதில் அமெரிக்காவின் நிலையும் நலனும் அடங்கியிருக்கிறது; அமெரிக்கா பார்மோசாவைக் காப்பாற்ற ஒப்புக்கொண்டிருக்கிறது; பார்மோசா மீது தாக்குதல் இருக்காது என்றால், அமெரிக்கா, அந்த நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளும்," என்று டல்லஸ் மேலும் தெரிவித்தார்.

"சூ-என்-லாயின் யோசனையில் உண்மையும், புனிதத்தன்மையும் இருப்பதாக அமெரிக்கா எண்ணுகிறதா?" என்று கேட்டபோது, "தனது நண்பர்கள் மூலம் சூ-என்-லாய் கூறியதன் பொருள் என்னவென்பதை அமெரிக்கா உணர்ந்து கொண்டது," என்று டல்லஸ் குறிப்பிட்டார்.

"சீனாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்த ஐக்கிய நாடுகள் சபை வழிகாட்டலாம்," என்று டல்லஸ் குறிப்பிட்டார்.

"பாண்டுங்கில் நடைபெற்ற ஆசிய—ஆப்பிரிக்க மாநாடு, சீனாவின் மீது சில கட்டுப்பாடுகளைத் திணித்திருக்கிறது; ஆகவேதான், கொரியா, திபேத் போன்ற விவகாரங்களில் பலாத்காரத்தைக் கையாண்டதைப் போல் பார்மோசா மீதும் பலாத்காரத்தைப் பிரயோகிக்கப் போவதாக அறிவித்த சீனா, இப்போது சமாதான வழிகளை நாடுகிறது,"

"சீனா இதை ஒரு பிரசார தந்திரமாகக் கையாளலாம்; ஆனால், நாங்கள் அதைக் காண முயல்வோம்; இப்படிச் செய்ததில் தேசீயச் சீனாவின் நட்பையும், மதிப்பையும் இழக்காத முறையில் நடந்துகொள்வோம்.

"சீனா சிறை வைத்திருக்கும் அமெரிக்க கைதிகளை விடுவித்தால் நலமாக இருக்கும்"

ஆனால், சென்ற சனிக்கிழமையன்று வெளியிடப்பட்ட அரசாங்க அறிக்கையில், 'சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்த இதை ஒரு நிபந்தனையாகக் கூறவில்லை,' என்று தெரிகிறது.

"சீனாவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவது, சீன சர்க்காரை அமெரிக்கா ஒப்புக்கொண்டதாக ஆகாது," என்றும் டல்லஸ் கூறினார்.

ரூ. 20 கோடியில் திட்டம்

மைசூரில் கன ரக மின்சார இயந்திரத் தொழிற்சாலை

சுமார் 20 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ள கன ரக மின்சாரத் தொழில் திட்டம் ஒன்றை இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்காக மைசூர் அரசாங்கம் பூர்த்தி செய்து விட்டதாகத் தெரிகிறது.

இதுபற்றிய ஜெர்மன் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் ஒன்றும் முடிவாகி விட்டதாகத் தெரிகிறது.

பெங்களூரில் உள்ள சர்க்கார் மின்சாரத் தொழிற்சாலைக்குத் தேவையான கன ரக இயந்திரங்களை இந்த தொழிற்சாலையில் உற்பத்தி செய்வார்களாம்.

இந்திக்குத் தென்னகம் காட்டும் எதிர்ப்பு!

வடவர் மனதைக் கலக்குகிறதாம்!

கட்சிக் கூட்டத்தில் காங்கிரஸ் தோழர்கள் எதிர்ப்பைக் காட்டுவர்

புதுடில்லி, ஏப். 27—

"தென்னாட்டிலிருந்து இந்தி மொழியை கட்டாயமாகவும் அவசரமாகவும் திணிப்பதற்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பு பாராளு மன்றத்திலுள்ள இந்தி மொழி பேசும் உறுப்பினர்களுக்கு அச்சத்தை உண்டுபண்ணியிருக்கிறதாம். இந்தியை தேசிய மொழியாக்க துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பை அவர்கள் கூர்ந்து கவனிக்கிறார்களாம்.

இந்தி மொழி பேசப்படாத பகுதிகளிலுள்ள பிரதிநிதிகளின் மாநாடு ஒன்று கூட்டி, அந்த மாநாட்டின் மூலமாக இந்தி எதிர்ப்பாளர்களின் கருத்தை அறியவேண்டுமென்றும், அதன் பின்னர் அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடி இந்தியை தேசீய மொழியாக்க அனைவருடைய ஒருமித்த கருத்துடன் ஒப்பந்தம் ஒன்று பெற ஏற்பாடு செய்யலாமென்றும் இந்தி ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

இச் செய்தியை, 'மெயில்' இதழின் நிருபர் தெரிவித்திருக்கிறார்.

மேலே கூறப்பட்டுள்ள மாநாட்டை இந்தியக் குடியரசுத் தலைவர் இந்திக்கு நியமிக்க இருக்கும் தனிக் குழுவின் நியமனத்திற்கு முன்னர் கூட்டுவது நன்மையாயிருக்கும் என்று கருதுகிறார்கள். மாநாட்டில் நிலவும் கருத்தை மனதில்கொண்டு அதற்கேற்ற முறையில் தனிக் குழுவை ஜனாதிபதி நியமிக்கலாம் என்று இந்தி ஆதரவாளர்கள் கருதுகின்றனர்.

இந்திய சர்க்காரின் வேலைகளுக்கென நடத்தப்படும் தேர்வுகள், இந்தியில் நடத்தப்படவேண்டும் என்று இந்தியசர்க்கார் செய்துள்ள முடிவு பாராளுமன்றத்திலுள்ள இந்தி மொழி பேசாத உறுப்பினர்கள் மனதில் 'புகைச்சலைக்' கிளப்பியிருக்கிறதாம். பாராளுமன்ற மண்டபத்தில் அவர்கள் இப்பிரச்சினை பற்றி கூடிப் பேசுகிறார்களாம்.

1960-ம் ஆண்டிலிருந்து இந்தி மொழியில்தான் அகில - இந்திய சர்வீசுகளுக்கான தேர்வுகள் நடைபெறுமென்றும், 1965 முதல் இந்தியாவின் தேசிய மொழியாக இந்தி பூரணமாக அமுல் நடத்தப்படுமென்றும் இந்திய சர்க்கார் சில நாட்களுக்கு முன்னர் அறிவித்து விட்டனர்.

1960-ல் என்றாலும், அல்லது 1965-ல் என்றாலும், இந்தியில் தேர்வுகளை எழுதும் அளவுக்கு தங்கள் பகுதி மாணவர்கள் தயாராக மாட்டார்கள் என்று இந்தி மொழி பேசாத உறுப்பினர்கள் எண்ணிக் கவலையுறுகின்றனர்.

காங்கிரஸ் கட்சியில் இருப்பதால், கட்டாயமாக இந்தியை ஆதரிக்க வேண்டிய நிலையில் உள்ள காங்கிரஸ் தோழர்களும், இந்தி மொழி பேசப்படாத பகுதிகளில் இந்தி மொழியைக் கற்றுக் கொடுக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பயன் தரவில்லை என்று கருதுகிறார்களாம்.

தேர்வுகள் எழுதும்போது மற்ற பகுதி மாணவர்கள் தொல்லையுற மாட்டார்கள்என்ற நம்பிக்கைஇந்தி மொழி பேசப்படாத பகுதியில் வாழும் மக்கள் மனதில் ஏற்படவில்லை என்று காங்கிரஸ் தோழர்கள் கருதுகின்றனர்.

ஆனால், இந்தப் 'புகைச்சலும்' அச்சமும் கருத்தளவில்தான் இருக்கிறதாம். இதுபற்றிப் பலர் விவாதித்த போதிலும், சர்க்காரிடம் இப்பிரச்சினையை எடுத்துச் செசால்லும் அளவுக்கு யாரும் முன் வரவில்லையாம்.

இவர்களெல்லோரும், இந்திக்கு தனிக் குழு ஒன்று நியமிக்கப்படும்போது பாராளுமன்றத்தில் தக்க முறையில் விவாதிக்கப் போகிறார்களாம்.

இந்தி மொழியினால் ஏற்பட்டிருக்கும் இந்த 'தலைவலி'யை காங்கிரஸ் உறுப்பினர்கள் அடுத்து நடைபெற இருக்கும் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் கிளப்ப இருக்கின்றனராம்.

பாராளுமன்றத்தில் உள்ள இந்திக் கழகத்தின் செயலாளரான திரிவேதி என்பவர் அங்கே உள்ள மற்ற மொழி உறுப்பினர்களை அழைத்து விவாதித்து, அதன் மூலம் அரசியல் சட்டத்தில் கண்டுள்ளபடி இந்தி மொழியின் நிலையை உயர்த்த வழி என்னவென்று கேட்கப்போகிறார் என்று சொல்லப்படுகிறது.

வட ஆற்காடு மாவட்ட தி.மு.க. தோழர்கட்கு!

"வடஆற்காடு மாவட்ட தி. மு. கழக அவசரக் கூட்ட அழைப்பிதழ் என்ற பெயரில், சிலர் கையெழுத்திட்டு, துண்டு அறிக்கையொன்று வெளியிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அந்த அறிக்கை வடஆற்காடு மாவட்டக் கழகத்தின் அனுமதியின் பேரில் வெளியிடப்பட்டதல்ல என்பதையும், மாவட்டக் கழகத்தின் அதிகார பூர்வமான கூட்டம் அல்ல என்பதையும், வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்,"

என்று, செயலாளர் முல்லை—சத்தி அறிவிக்கிறார்.

நேரு - அலி சந்திப்பு

கல்கத்தா, ஏப். 27—

இந்தியா, பாகிஸ்தான் பிரதமர்களான பண்டித நேருவும்—முகமது அலியும் வரும் மே 14-ந் தேதியன்று புதுடில்லியில் சந்தித்து பேசுவார்கள் என்ற தகவலை இங்கு பத்திரிகையாளரிடம் முகம்மது அலி தெரிவித்திருக்கிறார்.

எம். பி. ரெங்கசாமி (ரெட்டியார்) மறைவு

திருவண்ணாமலை, ஏப். 27—

சென்னை மேல்சபை உறுப்பினராகவும், வடஆற்காடுமாவட்ட ஆட்சி மன்றத் தலைவராகவும், நீதிக் கட்சியைச் சார்ந்தவராகவுமிருந்த எம். பி. ரெங்கசாமி (ரெட்டியார்) அவர்கள் நேற்றிரவு இயற்கை எய்தினார் என்பதை வருத்தத்துடன் வெளியிடுகிறோம்.

61 வயது நிரம்பப் பெற்ற அவருக்கு இரண்டு புதல்வர்களும், 5 பெண் குழந்தைகளும் உண்டு

அன்னாரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு நமது அனுதாபங்களை உரித்தாக்குகிறோம்

மே தின விழாப் பொதுக்கூட்டங்கள்

1-5-55 ஞாயிறு மாலை

★

சென்னை

திருவல்லிக்கேணி கடற்கரையில்

பேசுபவர் :

இரா. நெடுஞ்செழியன்

★

திருச்சி

டவுன் மண்டப மைதானத்தில்

தலைவர் : எம். எஸ். மணி

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

ஐ. எம். ஷெரீப்

எஸ். ஜி. கிருஷ்ணன்

★

துறையூர்

பிள்ளையார் கோவில் மைதானத்தில்

பேசுபவர் :

காஞ்சி-கல்யாணசுந்தரம்

★

சேலம்

செவ்வாய்ப்பேட்டை -மார்க்கெட் மைதானத்தில்

பேசுவோர்:

கே. ஏ. மதியழகன்

கண்ணதாசன்

முகவை ஆர்.எஸ். பாண்டியன்

★

குடியேற்றம்

ஆற்றில்

தலைவர் :

தோழியர் ஏ. பட்டம்மாள்

பேசுவோர்:

அருண்மொழி

பூங்கோதை

தேசியமணி

★

மதுரை

மகாளிப்பட்டி நெடுஞ்செழியன் திடலில்

தலைவர் : சுப. இராமநாதன்

பேசுவோர் :

நாஞ்சில் கி. மனோகரன்

எஸ். முத்து

கோவை செழியன்

கே. எஸ். சந்தானம்

★

உடுமலைப்பேட்டை

மஸ்தான் ராவுத்தர் திடலில்

தலைவர் : இரா. கனகு

பேசுவோர்:

ப. நாராயணன்

பல்லடம் பொன்னுசாமி

மூனார்

பேசுவோர்:

ஈரோடு எஸ். அப்பாவு

உடுமலை நாராயணன்

★

கடலங்குடி

அரசலாற்றில்

தலைவர் : டி. பழநிவேல்

பேசுவோர் :

கே. ஆர். பாலகிருஷ்ணன்

குடந்தை எஸ். ஆர். ராதா

எல். டி. கிட்டப்பா

★

பண்ணிமேடு எஸ்டேட்

3-வது டிவிஷன் பிரட்டுக்களத்தில்

தலைவர் : பி. எஸ். இராமசாமி

பேசுவோர் :

பி. என். இராமானுசம்

உடுமலை நாராயணன்

இரா. பிச்சைமுத்து

எஸ். அணைத்தலை

★

வேப்பஞ்சேரி

மந்தைவெளி மைதானத்தில்

பேசுவோர் :

இரா நடராசன்

மு. அ. செங்குட்டுவன்

என். ஆர். இராசகோபாலன்

டி. எஸ். கல்யாணசுந்தரம்

இரா. அழகரசன்

★

கோவை

காந்தி சவுக்கத்தில்

பேசுவோர்:

என். வி. நடராசன்

எஸ். ஏ. இராசமாணிக்கம்

★

கோவை—வெள்ளலூர்

2—5—55 மாலை

பேசுவோர்:

என். வி. நடராசன்

எஸ். ஏ. இராசமாணிக்கம்

★

சென்னிமலை

3—5—55 மாலை 7 மணிக்கு

பேசுவோர் :

என். வி. நடராசன்

வி. சண்முகநாதன்

★

கோவை—சிங்காநல்லூர்

குமரன் சதுக்கத்தில்

5—5—55 மாலை

பேசுபவர் : ஈ. வெ. கி. சம்பத்

'கொத்தலாவலையின் போக்கு அவமரியாதையைத் தேடியுள்ளது'

இலங்கை மக்கள் சபையில் எதிர்க்கட்சியினர் வர்ணனை

இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை பாண்டுங்கில் நடந்துகொண்ட முறையைக் கண்டிப்பதற்காக இலங்கை மக்கள் சபையில் கொண்டுவரப்பட்ட கண்டனப் பிரேபணை தோல்வியுற்றிருக்கிறது.

கண்டனத் தீர்மானத்திற்குச் சாதகமாக 14 வாக்குகளும், எதிராக 37 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

பாண்டுங் மாநாட்டில், இலங்கைப் பிரதமர் அரசியல் குழுவில் பேசுகையில், 'சோவியத் காலனிக் கொள்கை' என்ற முரண்பாடான பிரச்சினையை எழுப்பியதால், மாநாடு நிலை நின்று போகும் நிலையை உருவாக்கியதுடன், இலங்கைக்கு அவமரியாதையையும் தேடித் தந்திருப்பதாக, எதிர்கட்சியினர் கண்டனத் தீர்மான விவாதத்தின்போது பேசியிருக்கிறார்கள்.

பம்பாய் நாடார் மகாஜன சங்க முதல் மாநாடு

பம்பாய் வட்டார நாடார் மகாஜன சங்க முதல் மாநாடு, ஏப்ரல் - 30, மே. 1 ஆகிய இரு நாட்களிலும், பம்பாய் தாராவி, கன்னடிச் சால் மைதானம் பாண்டியன் பந்தலில் நடைபெறும். மாநாட்டிற்கு விருதுநகர் திரு. வி. வி. இராமசுவாமி, எம். எல். சி., அவர்கள் தலைமையேற்பார்.

நகராண்மைக்கழகப் பள்ளி ஆண்டு விழா

29—4—55 மாலை 4 மணியளவில், சென்னை—புதுவண்ணை திருவொற்றியூர் பெரியசாலையிலுள்ள நகராண்மைக் கழக உயர்தர ஆரம்பப் பள்ளியின் பதின்மூன்றாம் ஆண்டு விழா, திரு என் சங்கரன் தலைமையில் நடைபெறும்.

சென்னை மே தின விழாவில் பொதுச்செயலாளர்

"1—5—55 ஞாயிறு அன்று திருவல்லிக்கேணி கடற்கரையில் கொண்டாடப்பட இருக்கும் 'மே விழா' கூட்டத்தில் பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்துகொள்கிறார்.

"மாவட்டக் கழகச் சார்பில் பொதுச்செயலாளருக்கு பாராட்டுரை அளிக்கப்படும்.

'திரு. வி. க. திடலான 'கான்ரான்ஸ்மித் நகர்' மைதானத்தில் அன்று பிற்பகல் 2-மணிக்கு புறப்பட இருக்கும் மாபெரும ஊர்வலத்தை நடிகத் தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் முன்னின்று நடத்துவார்.

"எல்லா கிளைக் கழகங்களும் தங்களது கிளையின் வட்டப் பெயருடன் கழகக் கொடியேந்தி ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

"இயக்கப் பற்றுள்ள மன்றங்கள், படிப்பகங்கள், கலைக்கூடங்கள், தொழில் நிலையங்கள் இம் மே தின ஊர்வலத்தில் பங்கேற்குமாறு கோருகிறோம்,"

என்று, மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

நெல்லை மாவட்ட தி. மு. க. கிளைகளுக்கு

"தோழர்களே! வணக்கம் நமது மாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட கழகங்கள் இருக்கின்றன; ஆனால், அதிகாரபூர்வமான கழகங்கள் 67 தான்; காரணம், கழகம் ஆரம்பித்துத் தகவல் கொடுக்காததும், உறுப்பினர் சேர்த்துத் தலைமைக் கழகத்திற்குச் சேர வேண்டிய ரசீதுகள் போய்ச் சேராததும்தான்; எனவே மாவட்டக் கழகத்திற்குப் பிரதிநிதிகளை அனுப்பாத கழகங்களும், அனுப்பியும் ஏற்றுக்கொள்ளாத கழகங்களும் உடனடியாக மாவட்டக் கழகத்திற்குத் தகவல் கொடுத்து ஆவன செய்துகொள்ள வேண்டுகிறேன்.

"மாவட்டக் கழகத்திற்குத் தெரிவிக்காது நேரடியாகத் தலைமைக் கழகத்திற்குத் தகவல் கொடுத்தால், தலைமைக் கழகம் ஏற்றுக் கொள்ளாது; கழக சம்பந்தமான தொடர்புகள் மாவட்டக் கழகத்தின் மூலம் நடைபெற வேண்டும்.

"மாவட்டக் குழு கூடி, மாநில மாநாட்டு நிதிவசூல், இயக்க வேலை குறித்து முடிவு கட்டியவுடன் பண வசூல் தொடரும்.

"அடிக்கடி சுற்றறிக்கைகள் வரும்; அதிலுள்ளபடி, உடனுக்குடன் ஆவன செய்ய வேண்டும்.

"நெல்லை நகரக் கழகத் தேர்தல் அதிவிரைவில் நடைபெறும்; விளக்கம் பின்னர் வெளிவரும்.

"கடிதம் எழுதுவோர், 'கார்டோ, கவரோ வைத்து அனுப்ப பணிவுடன் வேண்டுகிறேன்.

"ஒவ்வொரு கிளைக் கழகமும் 'நம் நாடு' இதழைக் கட்டாயம் சந்தா செலுத்தி வரவழைத்துக் கொள்ள வேண்டும்,"

என்று, நெல்லை மாவட்ட தி மு. கழகச் செயலாளர் தூத்துக்குடி கே. வி. கே. சாமி அவர்கள் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.